# வீர சுதந்திரம் விழாவில் நம் மாணவர்கள்

மகாகவி பாரதியாரின் பிறந்த நாளான டிசம்பர் 11-ஆம் தேதியை ஆண்டுதோறும் பாரதித் திருவிழாவாக, கலை இலக்கியப் பெருவிழாவாக வானவில் பண்பாட்டு மையம் கொண்டாடி வருகிறது. அமைப்பின் வெள்ளி விழா ஆண்டான 2018-இல் பாரதியின் பிறந்த நாளைப் பாரதித் திருவிழா – தேசபக்திப் பெருவிழா என்று நான்கு நாள்கள் கொண்டாடப்பட்டது. விழாவின் சிறப்பு அம்சமாக 2018, டிசம்பர், 8-9 ஆகிய தேதிகளில் தமிழ்நாடு அரசின் கலை பண்பாட்டுத் துறை அமைச்சகத்துடன் இணைந்து 'வீர சுதந்திரம்' என்ற தலைப்பில் அமைந்த நிகழ்ச்சியில் நம் கல்லூரி மாணவர்கள் பறையாட்டமும், பாரதியுடனான நேர்காணலும் நிகழ்த்திக் காண்போரை அசத்தினர். ஒரு தேசபக்திக் கவிஞனுக்கு மாணவர்கள் செலுத்திய இந்தக் கலையஞ்சலி பாராட்டுதற்குரியது. விழாவில் மாணவர்களைப் பாராட்டி வானவில் பண்பாட்டு அமைப்பினர் சான்றிதழ் வழங்கிக் கௌரவித்தனர்.



